உ




யாழ். தென்மராட்சி சாவகச்சேரியின் கற்குளியை பிறப்பிடமாகக் கொண்டவரும்,
உயர் சைவ வேளாண்குல திலகரும், சிறந்த நல்லாசிரியருமாகிய

# திரு ஜெயகாந்தன் ஜெயந்தன்

அவர்களின் சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

27-10-2003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர்

# ஜெயகாந்தன் ஜெயந்தன்

மலர்வு
25.11.1975

உதிர்வு
27.09.2003

## திதி நிர்ணய வெண்பா

சுபானு வருஷத்து மந்தன் மாசத்தில்
சனித் தினமதில் பூர்வபக்கத்துப் ~ பூண்டதிதி
துதியையில் ஜெயந்தன் பூவுலகைவிட்டு
மேலுலகு எய்தினான் என்றுணர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# தோத்திரப்பாக்கள்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

தந்தையார் தாயார் உடன்பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாமாரே
வந்தவா றெங்கனே போமா றேதோ
மாயமாம் இதற்கேது மகிழவேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக்கேண்மின்
திகழ்மதியும் வாளரவுந் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
என்றெழுவார்க் கிருவிசும்பில் இருக்கலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பாரோடு விண்ணாய்ப் பரந்தவெம்பரனே போற்றி
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவ புரத்தரசே
திருப்பெரும் துறை உறை சிவனே
யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைப்பேன்
ஆண்டவுன் அருளில்லையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வருக வென்றுறருள் புரிவாயே.

## திருவிசைப்பா

நீறணி பவளக்குன்ற மேநின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக்கூத்தா
அம் பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள்சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரண் மேரு
விடங்கன் விடைப் பாகன்
பல்லாண்டென்னும் பதம் கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உனையென்றும்
மறவாமை வேண்டுமின்னும் வேண்டும் நான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ யாடும் போதுன்னடியின் கீழ்
இருக்க வென்றார்.

## திருப்புகழ்

அபசார நிந்தை பட்டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனை நான் நினைந்தருள் பெறுவேனோ
இம்மாமுகன் தனக் கிளையோனே
இகமா மடந்தையுத்தமி பாலா
ஜெபமாலை தந்த சற்குருநாதா
திருவாவினன் குடிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் துதி

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுல மானவை தீர்த்தெனை யாள்
கந்தா கதிர் வேலவனே உமையாள்
மைந்தா குமரா மறைநாயகனே.

## திருமந்திரம்

யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

நடுவு நின்றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவு நின்றார்க்கு நரகமும் இல்லை
நடுவு நின்றார் நல்ல தேவருமாவார்
நடுவு நின்றார் வழி நானும் நின்றேனே.

## பட்டினத்தார் பாடல்கள்

என்செயலாவது யாதொன்றும் இல்லை இனித்தெய்வமே
உன்செயலே என்று உணரப்பெற்றேன் இந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்றுமில்லை பிறப்பதற்கு
முன்செய்த தீவினையோ இங்ஙனமே வந்து மூண்டதுவே.

வீடிருக்கத் தாயிருக்க வேண்டும் மனையாள் இருக்க
பீடிருக்க ஊனிருக்கப் பிள்ளைகளும் தாமிருக்க
மாடிருக்க கன்றிருக்க வைத்தபொருள் இருக்கக்
கூடியிருக்கு நீ போனகோலமென்ன கோலமே.

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காண் இது எப்படியோ
அறமார் புகழ்ந்தில்லை அம்பலவாணர் அடிக்கமலம்
மறவா திருமனமே! அதுகாண்நல் மருந்துனக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லால் வருங்குற்றம் சிந்தனையால் வருந்தோம் செய்த
பொல்லாத தீவினை பார்வையில் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடும் தீங்குகள் ஆயவும் மற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே.

கறந்தபால் முலைப்புகா கடைந்தவெண்ணெய் மோர்வுகா
உடைந்து போன சங்கின் ஓசை உயிர்களும் உடன்புகா
விரிந்த பூஉதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே.

# விநாயகர் கவசம்

**(இது முத்கல முனிவருக்கு காசிப மகரிஷி உபதேசித்து இதைத் தமிழில் கச்சியப்ப சுவாமிகள் பின்வருமாறு பாடித் தந்துள்ளார்.)**

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு விநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியை யென்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வின்மகோதரர் காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.

கவின்வளரு மதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்ந்தர் காக்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமருபூ முகந்தன்னைக் குணேசரிநனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறு மிருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவினா
சன்காக்க விதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க.

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கி லிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை அல்லல்
உக்ககண பன்காக்க வூருவைமங்
களமூர்த்தி யுவந்து காக்க.

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் வர்த்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க.

அக்கினியிற் சித்தீசர் காக்கவும்
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கென்னுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
னன்காக்க திகழு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தனரே காக்க.

ஏகதந்தர் பகன் முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருந்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிச்
சாதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுந் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொறும்
ஒன்றுறா முனிவர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.

⓪⓪⓪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர் காப்பு

### திருச்சிற்றம்பலம்

சீர்மேவும் பெருங்குளத்து விநாயகனார் செய்யபாதம்
ஏர்மேவும் என்மனத்தே இருத்திவைத்து - பேர்மேவும்
ஜெயந்தன் தம்பி தன்மேல் கவிக்கு
தயவுடனருள் வேண்டுகின்றேன் யான்.

## காணிக்கை

மின்னாமல் முழங்காமல் நேர்ந்து கொண்ட
துயர்நிகழ்வின் விளைவை எண்ணி
கண்ணீரும் கம்பலையுமாகி நின்று
மனங்குழம்பிக் கலங்குகின்றோம்
தந்தையிழந்து தாயிழந்து
தாய் மனையிழந்து சொத்திழந்து
சோறிட்ட களனி தானிழந்து
உற்ற அயலையுமிழந்து
இறுதி உம்மையுமிழந்த எம்தேற்றம்
எப்படி அண்ணலே! ஆண்டில் இளவலானாலும்
அனுபவத்தால் உயர்ந்துஎம்மைக்காத்த
கனிவுகளை என்னே சொல்வேன்
நினைவினிலே காப்பதன்றி வேறறியேன்
நின்னன்புக் காணிக்கை என்று முமக்கே.

## *ஆசிரியப்பா*

இந்துமா கடல்சூழ் இலங்கைத் தீவில்
வந்துபேரருவி சூழ் வடபாலெல்லை
யாழ்குடா நாட்டில் யாவகர் சேர்க்கை
வாழ்பதி நாடாம் சாவகச்சேரியில்
காவும் களனியும் கடிதினில் சூழ
மேவும் சோலையும் மெருகிடும் பதியாம்
பெருங்குளம் விநாயகர் பெரிதிருந்தருள
மருவும் சாலைகள் மாண்புடனிலங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்குழிப் பதியாம் கடிந்திருளகல்வா
காளித் தெய்வம் கனிவுடனருளும்
அத்தகு நிலமதில் வாழ்ந்த ஜெயகாந்தன்
அன்னார் மின்தறி இயக்குநராக வாழ்ந்து
அன்னவர் வாழ்க்கையில் சொத்துச் சுகம் சேர
அவனியில் மார்க்கண்டு மகளாம் தமயந்தியை
மணம் செய்து மல்கிய வாழ்வில்
அன்னையின் அருளால் ஜெயந்தன் பிறந்தான்.
அருந்தவப் புதல்வரை அருமையாய் வளர்த்து
செல்வமும் செழிப்பும் சீரிதாய்ப்பெற்று
வளமுடன் வாழ்ந்த மூன்றாண்டு காலத்தில்
தந்தை தன்தாயை இழந்தார்.
இழந்த சோகத்தின் இன்னல் வாழ்வில்
மைந்தன் செல்வத்தை மகிழ்வுடன் இராசம்மாவிடம்
கொடுத்து பெற்றோர் உறவும் பெரிதாயிருக்க
ஆரம்பக்கல்வியை ஸ்ரீசண்முகானந்தாவில்
அருமையாகக் கற்றார் அன்னவர் வாழ்க்கை
ஏழுவயதாக தம்பி ஜெயந்திரன் தரணியில் பிறந்தான்.
அண்ணனும் தம்பியும் அருமையாய் வளர
கண்ணும் இமையும் கருத்துடன் காத்த
தந்தை தன்வாழ்வை சடுதியாய் முடித்தார்
தந்தை பிரிவை தாய் தாங்காமல்
தன் வாழ்வை நிலைகுலைத்து விட்டாள்
உற்ற புதல்வரை உறவில்விட்டாள்
தந்தையின் பிரிவை தாமுணராது
தங்கமாய் வளர்த்த இராசம்மா
கல்விச் செல்வத்தை கருத்துடன்பெற்று
உற்ற மக்கள் உறவில் கலந்து
சகோதர பாசமும் ஜெகமதில் கிடைக்க
ஆறாண்டு வகுப்பை சாவகச்சேரி
இந்துக் கல்லூரியில் கற்றார்
கல்வியில் ஊக்கம் கடமையில் கண்ணியம்
கடவுள் வழிபாட்டில் கனத்தபெருமதிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை குணங்களும் அருமையாய்பெற்று
உற்றவயதில் உயர்வகுப்பைத் தேறி
பல்கலைக்கழகம்புக இருபுள்ளி இல்லாமல்போகவே
கல்விக்கல்லூரி கரம்நீட்டி அழைத்தது
நாலாண்டு காலத்தில் நல்லறிவு பெற்று
நல்லாசிரியராய் இரண்டாயிரத்தொன்றில்
கிளிநொச்சி மாவட்டத்தில்
வேம்பொடுகேணி சி. சி. த. க. பாடசாலையில்
ஆசிரியர் பதவியை அருமையாய்பெற்றார்
அன்றைய காலத்தில் ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணியம் வித்தியாலயத்தில்
ஆசிரியராக சேவையாற்றினார்
சிலகாலத்தில் ஸ்ரீசண்முகானந்த வித்தியாலயத்திலும்
அரும்பணிபுரிந்தார் மேவிய சேவை
உரிய இடத்திலியங்கவே
முகமாலை பஸ்ஸில் முகமலர்வுடன் சென்று
பணிவன்புடன் பதவிவகித்தார்
அன்னார் சேவை அருமையாய் அமைந்தது
பேரும் புகழும் பாரில் பரவியது
ஆண்டவன் பார்வையும் அவருக்கிருந்தது
உற்றம் சுற்றம் நண்பர் சகோதரர்
நலன் பேணி வாழ்ந்தார்.
அன்பிலும் பண்பிலும் அவர் திகழ்ந்திட
அறம்பேணி வாழ அன்னவர் வாழ்க்கை
விதியொன்று சூழ்ந்து சதியொன்று காட்டியது
காலமும் கோலும் கடுமையாகவே.
உற்ற நாள் உறுசனி இருபத்தேழில்
மந்தன் மாசத்து இரண்டாயிரத்து மூன்றில்
இச்சக வாழ்வைக் கடிதாய் நீத்து
தேடிய செல்வம் விட்டு
நாடிய தெய்வத்தை நலமுறக் கலந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கற் பாக்கள்

### அன்னை இரங்கல்

பிள்ளை வரம்வேண்டி பெருவிரதமிருந்தேன்
அன்னை அருளால் அவனியில் கிடைத்ததென்று
உள்ளம் குளிர்ந்து உறுதெய்வம் வாழ்த்தி வந்தேன்
தெள்ளத் தெளிந்த தெளிவறிவில் திழைத்தேன்
பெற்றமனதில் பேருவகை பெற்றேன் தற்போது
உற்ற தெய்வம் உனை காக்க வேண்டி
உறுபூசை செய்தேன் அன்றோ
என்னைக் காப்பாய் என்றெண்ணியிருந்தேன்
இன்றோ என்னைத் தவிக்க வைத்தீர்
என்மனம் எப்படித் தேறும் ஐயா!

### சித்திமார் இரங்கல்

அக்கா மகனென்று அருமையாய் பேணிவந்தோம்
அன்பாய்ப் பேசி அகமகிழ வைத்தீர்
உள்ளன்புடனே உறுசெல்வம் பெற்றீர்
தெள்ளிய அறிவில் திளைக்க வைத்தீர்
தெய்வத்தின் சோதனையோ
சிலகாலம் பிரிவாச்சே
சிறகொடிந்த பறவைபோல
ஆனோம் ஐயா!

### மாமன்மார், மாமிமார் இரங்கல்

மருமகன் குறைதீர்க்க வந்த நின்னை
மண்விளையாட்டில் பார்த்து மகிழ்ந்தேன் அன்று
விளையாட்டுக் கல்வியினை விரும்பிச் செய்தாய்
வேறிடத்திலிருந்தாலும் விருப்புடனே விசாரித்து
ஆண்டின்று வந்துன்னைப் பார்த்த போது
அன்பொழுகத் தழுவியல்லே வந்தேன் தம்பி
இருதிங்கள் உனைக் கண்டு வந்ததன்றோ
அடுத்த தொலைபேசி வார்த்தைகேட்டு எம்நிலை
குலைந்தோம் தம்பி என்றுனைப் பார்ப்பேன் தம்பி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சித்தப்பாமார் இரங்கல்

பெற்றமகன்போல பிரியன்புடன் வாழ்ந்தாய்
உற்றவிடத்து உதவுவாய் என்றிருந்தோம்
மறுவற்ற அன்புடனே வாழ்ந்தாய் அன்றோ
சிறுதெய்வம் சிலகாலப் பிரிவால் வாடும்
சிந்தைக்கு மருந்து யாதோ தம்பி.

### சகோதர, சகோதரிகள் இரங்கல்

உற்றவிடத்துதவி உடன்பிறப்பால் உயர்ந்தீர்
பெற்றவர் பிரிந்தபோது பேரன்புகாட்டி வாழ்ந்தீர்
நற்றவத்தால் உம்மை நாம்பெற்றிருந்தோம்
கற்றவர் வாழ்க்கையெல்லாம் கசிந்துருகக் கண்டு
உற்ற தெய்வம் உமையழைக்க விழைந்த தன்றோ!
எத்தனை சமாதானமும் எமக்கினி வேண்டாம் என்றோ
முத்தான முகத்தைப் பார்க்க முழுநிலவு நிலைக்காதோ அண்ணா
மெய்க்காப்பாளன் என்றபதமும் தந்தீர்
இத்தனை துன்பம் துடைக்க யாரினி வருவார் அன்றோ!

### அம்மம்மா இரங்கல்

தாலாட்டி, பாலூட்டி வளர்த்த பிள்ளை
தங்கத்தால் தொட்டிலிலே வளர்ந்த பிள்ளை
மங்காத அன்பால் வளர்ந்த பிள்ளை
மாண்புடனே பார்க்குமென நம்பியிருந்தேன்
அழுது புலம்பி கதறியழ சென்றதென்னே.

### உறவினர் இரங்கல்

உற்றவிடத்து உதவி வந்தீர்
சென்றவிடமெல்லாம் சிறப்புச் செய்தீர்
நல்வார்த்தைகள் நயமாகத் தந்தீர்
செல்லாத இடமெல்லாம் சென்று வருவீர்
என்ன கேட்டாலும் அத்தனையும் செய்வீர்
அன்னவரோ உம்போல் மைந்தர்
உலகில் உண்டோ உம்பிரிவால் வாட
எமக்கினி ஆறுதல் தருவாருண்டோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரங்கல் பா

மூளாயிலிருந்து துவிச்சக்கர வண்டி
தன்னில் வந்து,
முழு மூச்சாய் கடமை, கண்ணியத்துடன் இருந்தாய்
களைப்பையும் பாராது செயற்பட்டாய்,
எம் பாடசாலைக்கே உழைத்தாய்,
எம் மனதில் உயர்ந்த இடம் பிடித்தாய்
ஜெயந்தா! நீ சொந்த இடம் சென்றாய்
நீ சுகமாய் வாழ்வாய் என நினைத்தோம்
காலம் செய்த கொடுமையோ?
தவியாய்த் தவிர்க்கின்றோம்
தம் செயலை எண்ணி.
திருமணக் கோலம் காண இருந்த எம்மை
சோகக் கண்ணீரில் ஆழ்த்தி விட்டதேனோ ஐயா.
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
எம் பாடசாலைச் சமூகம் உம்மை
என்றுமே மறவாது.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.

யா/ ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலங்கள் கரைந்தாலும் – நட்பின் கோலங்கள் மறையாது

*நண்பா!*
*நாம் சுற்றித் திரிந்த இடங்கள்*
*எல்லாம் இப்போதும்*
*எம் நினைவுகளின் ஆட்சிகளில்*
*கட்டுப்பட்டுக் கிடக்கிறது*
*நாம் கற்றுத் தெளிந்த*
*கல்வியியல் கல்லூரி எம்*
*கண்களின் மணிகளாய்*
*நிற்கிறது!*
*ஆனால் இன்று நீயில்லை!*
*உன் நினைவுகளும்*
*உன் பிரிவின் துயரங்களும்*
*எம்கூடவே*
*பசையாய் ஒட்டிக் கொண்டுவிட்டன.*

*உன்னைப் பற்றிய நினைவில்*
*எம் மனது சுற்றிச் சுற்றி*
*வந்தபடி இருக்கிறது!*
*உன்னிடம் கற்ற*
*நட்புப் பாடங்கள்*
*நம் நினைவுகளில்*
*நிழலாடி புரையோடி நிற்கிறது!*

*காலனை இப்போது*
*கண்டால் .....*
*காலால் உதைக்க வேண்டும்*
*போல் இருக்கிறது!*
*உன்மேல் நாம் மட்டும்*
*காதல் கொள்ளவில்லை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காலனும் காதல்*
*கொண்டிருக்கிறான் என்று*
*இப்போதுதான் புரிகிறது.*

*மரணம் ....*
*உன்னை அழைத்துக் கொண்டாலும்*
*உன் நினைவுகளை*
*எம்மிடம் பகமையாய்*
*விட்டுத்தான் சென்றிருக்கிறது!*

*காலம் கரைந்தோடினாலும்*
*நண்பா நின் உருவமும் ...*
*உந்தன் நினைவும் ...*
*உந்தன் வார்த்தைகளும் ...*
*உந்தன் நளினமும் ...*
*உந்தன் நயனமும் ...*
*கரைந்து போகாது எம்கூடவே*
*கட்டுண்டு இருக்கும்.*

*வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி*
**நண்பர்கள்.**

**தேற்றம்**

வீடிருக்க தாயிருக்க வேண்டு மனையாளுமிருக்க
பீடிருக்க ஊன் இருக்க படிக்கும் பிள்ளைகளும் தாமிருக்க
மாடிருக்க கன்றிருக்க வைத்த பொருள் இருக்க
கூடியிருக்க நீ போன கோலமென்ன கோலமே.

அழுதாற் பயனென்ன நொந்தால் பயனென்ன ஆவதில்லை
தொழுதால் பயனென்ன நின்னை ஒருவர் சுடவுரைத்த
பழுதால் பயனென்ன நன்மையும் தீமையும் பங்கயத்தோன்
ஒழுதாப்படி வருமோ சலியாதிரு என்ஏழை நெஞ்சே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பள ஆணைக்குழு அறிக்கை 2000

இ.க.நி.சே., இ.அ.சே., இ.ஆ.சே. ஆகியவற்றிற்குத் திஸ்ஸ தெய்வேந்திரா சம்பள ஆணைக்குழுவால் சிபார்சு செய்யப்பட்ட சம்பளத்திட்டம்

(மீளாய்வு செய்யப்பட்டு வெளியிடப்பட்ட திகதி:- 31-12-2002)

இலங்கை கல்வி நிர்வாக சேவை (இ.க.நி.சே) இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (இ.ஆ.க.சே.) நியமன

| வகை சம்பள வகை | தற்போதைய சம்பளத் திட்டம் | புதிய சம்பள வகை சிபார்சுசெய்யப்பட்ட சம்பளத்திட்டம் |
|---|---|---|
| இ.க.நி.சே. வகுப்பு - I | V - 7 - 1 | 255600 - 15 x 8760 - 387000 |
| இ.க.நி.சே. வகுப்பு - II | V - 6 - 1 | 206640 - 11 x 6480 - 277920 |
| இ.க.நி.சே. வகுப்பு - III | V- 5 - 1- 2 | 153840 - 18 x 3300 - 213240 |

### இலங்கை அதிபர் சேவை (இ.அ.சே) Sri Lanka Principal Service

| நியமன வகை சம்பள வகை | தற்போதைய சம்பளத் திட்டம் | புதிய சம்பள வகைசிபார்சு செய்யப்பட்ட சம்பளத்திட்டம் |
|---|---|---|
| இ.அ.சே.விசேட தரம் | V - 7 - 2 | 264360 - 14 x 8760 - 387000 |
| இ.அ.சே.வகுப்பு- I | V - 16 - 6 | 188280 - 8 x 6480 - 8 x 8760 - 310200 |
| இ.அ.சே.வகுப்பு- II - 1 | V - 16 - 5 | 178680 - 12 x 6480 - 256440 |
| இ.அ.சே.வகுப்பு- II - 2 | V - 16 - 4 | 147600 - 12 x 3300 - 187200 |
| இ.அ.சே.வகுப்பு- III | V - 16 - 3 | 118380 - 14 x 3000 - 160380 |

### இலங்கை ஆசிரியர் சேவை (இ.ஆ.சே) Sri Lanka Teachers Servic (SLTS)

| | | |
|---|---|---|
| இ.ஆ.சே.வகுப்பு - I | V - 16 - 5 | 178680 - 12 x 6480 - 256440 |
| இ.ஆ.சே.வகுப்பு - II - 1 | V - 16 - 4 | 1487600 - 12 x 3300 - 187200 |
| இ.ஆ.சே.வகுப்பு - II - 2 | V - 16 - 3 | 118380 - 14 x 3000 - 160380 |
| இ.ஆ.சே.வகுப்பு - III - 1 | V - 16 - 2 | 100320 - 17 x 2580 - 144180 |
| இ.ஆ.சே.வகுப்பு - III - 2 | V - 16 - 1 | 87780 - 20 x 1920 - 126180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - இலங்கை
முற்றத்தில் சிந்திய இரத்தினங்கள்
பற்றும் பாசமும் வைத்தவற்றை - நல்ல
பாதையிற் சேர்க்கும் பணி எமதே. முத்து.

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளிவரும் பிஞ்சுப் பாலகனாய் - அவன்
தன்னந் தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை அன்பையும் ஊட்டிடுவோம். முத்து

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் - உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் - அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம். முத்து

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே - ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம். முத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்



எங்கள் குடும்ப அன்புச் செல்வமாகிய ஜெயகாந்தன் ஜெயந்தன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்தோர்க்கும், ஈமக்கிரியை வரை உடனிருந்தும், அடிக்கடி வந்தும் துன்பத்துயர் பகிர்ந்து ஆறுதல் வார்த்தைகள் கூறியோர்க்கும், மரணச்சடங்குகள், ஈமக்கிரியைகள் யாவற்றிலும் கலந்து அஞ்சலி செலுத்தியோர்க்கும், அஞ்சலி உரை ஆற்றியோருக்கும், இறுதிக் கிரியைகளின் பின்னும் வீட்டுக்கு வந்து ஆறுதல் கூறி அமைதி தந்தோர்க்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பி அஞ்சலி செலுத்தியோர்க்கும், நிதிப் பங்களிப்புக்களை வழங்கிய கல்விசார் சமூகத்திற்கும், துயருற்ற வேளையில் உணவு, உண்டியளித்து உதவிகள் பல புரிந்தோர்க்கும், 2003.10.25 நடைபெற்ற அந்தியேட்டி கிரிகைகளில் பங்குகொண்டு சிறப்பித்தோர்க்கும், இன்று எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டிகரணக் கிரியைகளில் பங்குகொள்வதோடு மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் வேண்டி எங்கள் மனமார்ந்த நன்றிகளை உளமார்ந்து கூறிநிற்கின்றோம்.

மகளிர் கல்லூரி வீதி,
கற்குளி,
சாவகச்சேரி.
2003.10.27.

இங்ஙனம்
அமரரின் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ அது இங்கிருந்தே
எடுக்கப்பட்டது
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது
எது இன்று உன்னுடையதோ, அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எமது படைப்பின் சாராம்சமுமாகும்.

*பகவான் ஸ்ரீகிருஷ்ணர்.*

தமிழ்ப்பூங்கா (மல்ரி ஓவ்செற்) அச்சகம் – நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org